இதுதான் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் நான் எழுதி அனுப்பியுள்ள கடிதத்தின் விவரம். எனவே இத்தனை தெளிவாக நான் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் எழுதியுள்ள கடிதங்களின் விவரத்தை அறிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திண்டிவனத்தில் 10-4-1995 அன்று நடைபெற்ற சம்பவத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். இனிமேலாவது இது போன்ற நெருடலான பிரச்சினைகளை இந்த அவையில் விவாதிக்கின்ற ஒரு சங்கடமான சூழ்நிலையை எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உருவாக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு இதற்கு மேல் இந்தப் பிரச்சினையை விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இவ்வளவு விளக்கத்திற்குப் பின்னர் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி, பேரவையின் இசைவை இந்தத் தீர்மானத்திற்கு மறுக்கிறேன்.

இங்கிருந்து வெளியே போன உறுப்பினர்கள் பேரவைக் கட்டிடத்திற்கு வெளியே போய் தங்களுடைய வாய்களில் கறுப்புத் துணியைக் கட்டிக்கொண்டு போட்டோ எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியே போய் வாயைக் கட்டிக்கொண்டு இருக்க வேண்டியவர்கள் என்று அவர்களே காட்டியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே முன்னேற்பாடாக அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. (குறுக்கீடு) எப்படி திடீரென்று இத்தனை பேருக்கும் எங்கிருந்து கறுப்புக் கொடி வந்தது. அதெல்லாம் முன்னேற்பாடு செய்து படம் எடுப்பதற்கென்றே சில ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

எல்.டி.டி.ஈ யைப் பற்றிக் குறிப்பிடும்போது திரு. சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்த சொல் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் வகையில் உள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. செ.கு. தமிழரசன் அவர்கள், சமீபத்தில் சுப்பிரமணியன் சுவாமி என்பவர் தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஒரு பிரிவின் பெயரைச் சொல்லி ஒரு பேட்டியில் இழிவுபடுத்துகிற

வகையில் அவர்களை இலங்கைப் போராளி அமைப்பைச் சேர்ந்த எல்டிடிஈ-யுடன் ஒப்பிட்டு அவர்களை அழைத்தபோது இந்தத் தாழ்த்தப்பட்ட பிரிவினருடைய அந்தக் குறிப்பிட்ட பெயரைச் சொல்லி அழைத்து இழிவுபடுத்துகிற வகையில் செய்திருப்பது இந்திய அரசியல் சட்டத்திற்கும், இங்கே தீண்டாமையை ஒழிப்பதற்காக நாம் கொண்டிருக்கிற சிலபல சட்ட விதிமுறைகளுக்கும் மாறானது என்பதைக் குறிப்பிட்டு அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க அரசின் கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைக் கொண்டுவர என்னிடத்தில் அனுமதி கோரியிருக்கிறார். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நான் அனுமதித்து இருக்கிறேன். திரு. செ.கு. தமிழரசன் (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி, நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள், எல்லாப் பிரச்சினைகளிலும் உங்கள் பெயர் இருக்கும். திரு. தாமரைக்கனியும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்துகிற வகையில் கடந்த மாதத்தில் மதுரையில் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி என்பவர் எல்டிடிஈ. இயக்கத்தின் தலைவராக விளங்குகிற பிரபாகரனைக் குறிப்பிட்டுப் பேசுகிறபோது, நான் அந்த வார்த்தையை இங்கே சொல்வதற்கு தடுமாறுகிறேன். அப்படிப்பட்ட ஒரு இழிவான வார்த்தையை, எந்த வார்த்தையை ஒழிக்கவேண்டுமென்று எங்கள் வணக்கத்திற்குரிய இரட்சகர் பாபாசாகேப் அம்பேத்கார் அவர்களும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும் காலமெல்லாம் போராடினார்களோ அந்த வார்த்தையை இழிவுபடக் கூறியிருக்கிற வேதனையை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரபாகரனைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய சுப்பிரமணியசுவாமி, அவர் ஒரு சர்வதேசப் பறையர் என்று சொல்லியிருக்கிறார். அதை அவர் சொல்லுவதற்கு முன்னாலே எல்டிடிஈ-யின் அலுவலகம் முழுவதும்-இன்டர்நேஷனல் பறையா என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையிலே வந்திருப்பது இதுதான். Swamy alleges that though the L.T.T.E. had become an International Pariah leading to the closure of its offices in many countries, it was still active in Tamil Nadu. மற்ற இடத்திலெல்லாம் அவர்களுடைய அலுவலகத்தை மூடிவிட்டார்கள், இங்கு மட்டும் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வதில் இருந்து இங்கும் அவர்கள் நடமாடக் கூடாதவர்கள் என்று இந்தக் குறிப்பிட்ட பிரிவினரைப்பற்றி இழிவாகப் பேசியதைத்தான் குறிப்பிட்டார்கள். திரு. செ.கு. தமிழரசன்.

பிற்பகல் 12-45

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அவர்கள் சொல்கிறபோது, உலகம் முழுவதும் அவர்கள் அலுவலகம் மூடப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டிலே மட்டும் அவர்கள் நடமாட வேண்டுமா என்று அவர்கள் கேட்பதிலே ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, நலிந்த மக்கள் நடமாடக் கூடாதவர்கள் என்கிற வகையில் கொச்சைப்படுத்தி சொல்லியிருக்கிறார். இதைத் தொடர்ந்து அவர் சொல்கிறபோது, இலங்கை அதிபர் சந்திரிகா அவரோடு பேசத் தேவையில்லை என்று சொல்கிறார். ஆக அதை அவர் ஒப்புதலோடு சொல்கிறபோது தாழ்த்தப்பட்ட மக்கள் பேசக்கூடாதவர்கள், பேசத் தகுதியற்றவர்கள், அவர்களைப் போல பிரபாகரனிடமும் பேசக்கூடாது என்பதை வலியுறுத்தும் வண்ணம் அவர் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஜாதியும், ஜாதி உணர்வுகளும், அதன் போக்கும், செயல்பாடுகளும் எல்லா வகையிலும் அழிக்கப்பட்டு விட்டதாக அரசியல் சட்டம் சொல்கிறது. அதை மனதிலே நினைத்து ஒருவர் குறிப்பிட்டால்கூட, அவர் தண்டனைக்குரியவர் ஆவார் என்று அரசியல் சட்டம் சொல்கிறது. இப்படிச் சொல்லுகிறபோது, அரசமைப்புச் சட்டத்தின் பெயராலே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர், மத்திய அமைச்சரவையில் ஒரு அமைச்சர் பதவியின் அந்தஸ்திலே இருக்கிறவர் இதை எப்படிப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை எங்களால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. இது தாழ்த்தப்பட்ட மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின், 1½ கோடி மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் வண்ணம் மனதை புண்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கிறது. ஒரு சாதாரண குடிமகன் இத்தகைய இழிவான வார்த்தையைப் பயன்படுத்தினால் பீப்பிள்ஸ் சிவில் ரைட் என்று சொல்லப்படுகிற குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் பெயராலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறோம். மிக உயரிய பொறுப்பிலே இருக்கிற ஒருவர் பத்திரிகைக்காரர்களை வைத்துக் கொண்டு பகிரங்கமாக அதைச் சொல்லி, அதுவும் கடந்த 6-3-1995 ஆம் தேதி இந்து நாளிதழிலே 14-ஆம் பக்கத்திலே வந்திருக்கிறது. இப்படி பார்க்கிறபோது ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை, உரிமைகளை கொச்சைப்படுத்தும் வண்ணம் அது இருக்கிறது. காலங்காலமாக இருக்கின்ற அரிச்சந்திரா நாடகத்திலே ஒரு பாடல் வரும். அந்தப்பாடலை பாடக்கூடாது என்று நாம் சட்டம் போட்டு இருக்கிறோம். அந்தப் பாடலை காலங்காலமாக பாடியவர்கள் பாடினால்கூட அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறோம். அப்படி பழைய பாடலையே தூக்கி எறிந்திருக்கிற நேரத்தில், இப்போது ஒரு புதிய பிரமுகர் ஒடுக்கப்பட்ட மக்களை அசிங்கப்படுத்தி இருக்கிறார். அவர்களுடைய உணர்வுகளை கொச்சைப்படுத்தி இருக்கிறார் என்றால் பி.சி.ஆர். நடவடிக்கைகளிலே மிகவும் கடும் தண்டனை அளிக்கலாம் என்று இருக்கிறது— தண்டனை வழங்க வேண்டுமென்று புகார்

மனுக்கள் காவல் துறைக்கு தரப்பட்டிருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்திலேகூட ஒரு வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே எங்களுடைய உணர்வுகளை, எங்களுடைய உரிமைகளை பாதுகாத்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இருக்கின்ற 1½ கோடி ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளை, உரிமைகளை கொச்சைப்படுத்தும் அந்த மனிதரை கடுமையான நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டுமென்பதை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொல்லிவிட்டார் அல்லவா? ஸ்பெஷல் மென்சனாக அவர் சொல்லிய உணர்வுகளுக்கெல்லாம் நீங்களும் சொந்தம். சரி, திரு. தாமரைக்கனி, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே, பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே சுப்பிரமணியன் சுவாமி என்ற ஒரு பெரிய மனிதர் ஒரு சமுதாயத்தைப் பற்றி 1½ கோடி மக்கள் இந்த தமிழ்நாட்டில் வாழ்கிறார்கள், இந்தியாவிலும் வாழ்கிறார்கள். அந்தச் சமுதாயத்தைப் பற்றி—மிகவும் தரக்குறைவாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் சொன்னதுபோல் இந்து பத்திரிகையிலே வந்ததை நானும் பார்த்தேன். அது சம்பந்தமாக அந்தச் சமுதாயத்து மக்கள் காவல் துறையிலே மனு கொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக, டாக்டர் அம்பேத்கார் பேரவையில் இருந்த கந்தசாமி சிங், பி.ஏ., பி.எல்., என்ற வழக்கறிஞர் தலைமையில் அந்தச் சமுதாயத்து மக்கள் சேப்பாக்கம் அருகில் உண்ணாவிரதம் இருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல சாதாரண ஒரு பாமரன், விவரம் ஒன்றும் இல்லாதவன், ஏதாவது ஒரு சமுதாயத்தைப் பற்றி, அந்தச் சமுதாயத்தைப் பற்றி சொன்னால் தீண்டாமை வழக்கு போடுகிறார்கள். ஒரு மந்திரி அந்தஸ்திலே உள்ளவர் என்று சொல்லக்கூடிய ஒரு பெரிய மனிதர் எப்படி ஒரு சமுதாயத்தைப் பற்றி இழித்துப் பேசலாம், எப்படி நாட்டிலே நடமாட மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அனுமதி கொடுக்கின்றன என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகவே 7-சி பிரிவின்படி, தீண்டாமை சட்டத்தின்கீழ், இப்படி தவறு செய்பவர்கள் மீது 6 மாத சிறை தண்டனை, 3 மாத சிறை தண்டனை, 500 ரூபாய் அபராதம் என்று இருக்கிறது. இப்படி பெரிய பொறுப்பிலே உள்ளவர்கள் மீது சட்டம் பாயலாமா என்று நினைக்கலாம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும், உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் இருக்கின்றன. பாராளுமன்றத்திலும், பல மாநில சட்டமன்றங்களிலும் எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன. ஆகவே தயவு

தாட்சண்யம் இருக்கக்கூடாது. எல்லோரும் இந்த நாட்டின் மனிதர்கள்தான், எல்லோரும் இந்த நாட்டின் பிரதிநிதிகள்தான். என் இரத்தம் கொதிக்கிறது. எப்படி ஒரு சமுதாயத்தைப் பற்றி பேசலாம். தமிழக அரசு ஏன் அவரை கைது செய்வதற்கு தயங்குகிறது ? உடனே கைது செய்ய வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு பிரதமருக்கு தெரியப்படுத்த வேண்டும். கண்டனத் தீர்மானம் போட்டு எம்.பி. பதவியிலிருந்து நீக்க வேண்டும. 'காட்' ஒப்பந்தத்தின் தலைவராக இருக்கக்கூடாது. அந்தப் பதவியிலிருந்தும் காலி செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில் நுழையக் கூடாது. நுழைந்தால் மக்கள் சரியான பாடத்தை புகட்டுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எம். பி. பதவியை ஏற்கெனவே இழந்து விட்டார். நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12.50

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கு. தமிழரசன் அவர்களின் உணர்வுகளை நான் மதிக்கிறேன். இந்த அரசு மதிக்கின்றது. இந்த மாநிலத்தில் கோடிக்கணக்கில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள், இவர்களைக் கேவலப்படுத்துகின்ற வகையிலே டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி பேசியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நாடெங்கிலும் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களை அசிங்கப்படுத்துகின்ற வகையில் இந்தப் பேச்சு அமைந்திருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரியதாகும். காலம் காலமாக இந்த மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைத் தூக்கி விட வேண்டுமென்று சமுதாயத்தில் மற்றவரோடு சரிநிகர் அந்தஸ்தை அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்பதற்காக தமிழக அரசு எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. இதற்காக பல சட்டங்களையும் இயற்றி இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பழைய நாடகம், அரிச்சந்திரா நாடகத்தில் காலம் காலமாக, எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்ட ஒரு பாடல். அதில் வரும் 'ஆதியிலும் பறையன் இல்லை. பாதியிலும் பறையன் இல்லை' என்ற பாடலைக் கூட அந்த நாடகத்தில் பாடக்கூடாது என்று அரசு தடுத்துள்ளது. அப்படிப் பாடியவர்கள்மீது தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அண்மையில்கூட அரசு ஆவணங்களிலும், காவல் துறை அறிக்கைகளிலும், கோப்புகளிலும் வழக்கமாக இங்கே பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள் ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்று குறிப்பிடுவார்கள். அதைக்கூட மாற்ற வேண்டுமென்று நான்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY

உத்தரவிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி-திராவிடர்கள் மற்றும் ஜாதி இந்துக்கள் என்றோ அல்லது உயர்ஜாதி இந்துக்கள் என்றோ குறிப்பிடக்கூடாது என்று நான் தெளிவாக ஆணையிட்டு அதற்கு மாறாக ஆதி-திராவிடர்களும் மற்ற ஜாதியினரும் என்றுதான் குறிப்பிட வேண்டுமென்று அவ்வளவு ஆணித்தரமாக உத்தரவிட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் சுப்பிரமணியன் சுவாமி போன்ற ஒருவர், ஒரு மத்திய அமைச்சருக்குச் சமமான அந்தஸ்து வகிக்கும் ஒருவர் இப்படி நாடெங்கிலும், வாழும் ஆதி திராவிட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகின்ற, கேவலப்படுத்துகின்ற வகையில் பேசியிருப்பதை இந்த அரசு மிகவும் கவனமாக எடுத்துக் கொண்டுள்ளது. இதன்மீது அரசு, சட்டத்தின்படி தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்டவர்களுக்கு நாட்டு மக்களும் சரியான தண்டனை தருவார்கள் என்றே நம்புகிறேன்.

5. கவன ஈர்ப்பு

போளூர் வட்டம், வாழியூர் கிராமத்திற்கு சில பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் படும் அவதி குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்.

*திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “போளூர் வட்டம் வாழியூர் கிராமத்திற்கு தடம் எண்22 மற்றும் 24 பேருந்துகள் 2 நாட்களாக நிறுத்தப்பட்டு இருப்பதால் மக்கள் படும் அவதி குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பெற்றிருக்கிறது.